13.02.2026

MCOP No: 12/2021

ம.சா. 1 - நாகராஜன் த/பெ. சுப்பிரமணியன்

**2ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. தாவா மனு விபத்தானது 25.05.2011ம் தேதி ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா விபத்திற்கு எனக்கு எதிராக தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கைக்கு எதிராக நான் எந்தவித மேல் முறையீடு எந்தவொரு நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரே இரு சக்கர வாகனத்தில் வந்த நபர் மேற்படி விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மனைவி, எனது மகன் ஆகியோர் MCOP No. 70/2014, MCOP No. 71/2014 ஆகிய வழக்குகளை எனக்கு எதிராக தாக்கல் செய்து இழப்பீடு தொகை பெற்று அதனை தாவா மனுவின் 4ம் எதிர்மனுதாரர் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். எனக்கு எதிராக வந்த முதலாவது எதிர்மனுதாரருக்கு பாத்தியமான இரு சக்கர வாகனத்தின் பதிவு எண். TN 63 K 0165 என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு 13.07.2009 முதல் 12.07.2010 வரை மட்டுமே தாவா மனுவின் 2ம் எதிர்மனுதாரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தாவா மனு விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரிடம் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு புதுப்பிக்கவில்லை என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி வாகன விபத்தில் எனக்கு ஏதேனும் இழப்பீடு 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து கிடைப்பதாக இருந்தால் இறந்து போன 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுதாரர்களிடம் இருந்து மட்டுமே நான் இழப்பீடு தொகை பெற இயலும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 ஆவணத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு காப்பீடு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என சங்கதி குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரரிடம் 1ம் எதிர்மனுதாரருக்கு காப்பீடு சம்மந்தமான ஒப்பந்தம் எதுவும் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்காக இழப்பீடு எதுவும் வழங்க வேண்டியது இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் மருத்துவமனையில் பரிபூர்ணமாக குணம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. நான் பெற்றுள்ள மருத்துவ பில் ஆவணங்கள் உண்மையானவையா என்றும் மேற்படி மருத்துவ பில்களுக்கு மருத்துவ கிளைம் மூலம் தொகை எதுவும் பெற்றுள்ளேனா என்பது குறித்தும் மேற்படி மருத்துவமனை அலுவலர்களை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். எனது மனைவியும், எனது மகனும் தங்களுக்கான இழப்பிட்டு தொகை கோரி தாக்கல் செய்த மனுக்களில் வேண்டும் என்றே தாவா மனுவின் 1,2 எதிர்மனுதாரர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து எனது மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்தில் நானும், எனது மனைவியும், எனது மகனும் ஆகிய மூவரும் பயணம் செய்தோம் என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தில் மோட்டார் வாகன சட்டப்படி இருவர் மட்டுமே பயணம் செய்ய முடியும் என விதி உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னுடன் வந்த எனது மகன் கை குழந்தை ஆவார். ஏற்கனவே எனது மனைவிக்கும் எனது மகனுக்கும் 4ம் எதிர்மனுதாரர் சார்பாக இழப்பிட்டு தொகை நீதிமன்ற உத்தரவின் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதனால் எனக்கு 4ம் எதிர்மனுதாரர் இழப்பிட்டு தொகை கொடுக்க வேண்டியது இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே எனது மனைவி, எனது மகன் ஆகிய இருவருக்கும் இழப்பிட்டு தொகை கொடுக்கப்பட்டுவிட்டதால் பின் யோசனையின் பெயரில் நான் தாக்கல் செய்துள்ள தாவா மனுவில் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எந்தவொரு வழக்கிலும் மனுதாரர் மனுதாரராகவும் எதிர்மனுதாரராகவும் வழக்கு நடத்த இயலாது என்றும் தாவா மனுவில் நான் மனுதாரராகவும் 3ம் எதிர்மனுதாரராகவும் தரப்பினராக உள்ளது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்திற்கு நான் தான் உரிமையாளர் என்றும், நான் காப்பீடும் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். தாவா வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் மிகைப்படுத்தி இழப்பிட்டு தொகை பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி மருத்துவ பில்கள் சம்மந்தமாக மருத்துவர்கள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் எந்த மருத்துவமனையிலும் தொடர்ந்து சிகிச்சை மேற்கொள்ளாமல் கால இடைவெளி விட்டு விட்டு சிகிச்சை எடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு நஷ்டயீடு கிடைக்கும் பட்சத்தில் எதிரே வந்த வாகனத்தின் உரிமையாளர் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும் 4ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டியது இல்லை என்றால் சரிதான். தாவா வழக்கு சம்மந்தமாக நான் எதிரே வந்த இரு சக்கர வாகன ஓட்டுநர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2026.02.13 14:30:03 +0530